
# அகத்தில் அறிவதே அறிவு!

ப்ரக்ஞன்



பராபரம் பாடசாலை

ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

# அகத்தில் அறிவதே அறிவு!

ப்ரக்ஞன்

# அகத்தில் அறிவதே அறிவு!

மனிதனுக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு ஏராளமான ஆசைகள் உள்ளன. ஆனாலும், என்றாவது ஒரு நாள் அவன் ஆசைப்பட்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்தும் அவனை விட்டுப் பிரிவதும் அல்லது அவன் அவற்றைவிட்டுப் பிரிவதும் சர்வ நிச்சயம்.

அதாவது, மனிதன் ஆசைப்படும் அனைத்தும் ஏதாவது ஒரு வகையிலே, அவனை விட்டுப்பிரிவது என்பது, தவிர்க்க முடியாதது. அது பொருட்களாக இருந்தால் உடைந்தோ அல்லது பழுது ஏற்பட்டோ அவனை விட்டுப் பிரியும். உறவுகளாக இருந்தால் ஒரு நாள் இறப்பின்மூலம் அவனை விட்டுப் பிரியும்.

அவ்வாறு, அவைகள் அவனை விட்டுப்பிரியும் முன்பாக, அவனாக அவைகள்மீது வைத்திருக்கிற ஆசைகளை விடும்போது, அதன்மீதுள்ள பற்று அவனிடமிருந்து விடுபடும். அதன்காரணமாக, அவனுக்கு ஆனந்தம் உண்டாகும்.

அவனது இயல்பான ஆனந்தத்தை அவன் அனுபவிக்க முடியாமல், அற்ப ஆசைகளினால், அவனை அவனே கட்டி வைத்துக் கொண்டு, கஷ்டப்பட்டுக் கொண்டு, பல துக்கங்களினால் துடித்துக் கொண்டிருக்கிறான்.

அவன் ஆசைகள் விட, விட ஆனந்தம் தானே வரும்.

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசைப் படப் பட ஆய் வரும் துன்பங்கள்**
**ஆசை விட விட ஆனந்தம் ஆமே.** - (திருமந்திரம்).

ஆசைகளை அறுக்க, அறுக்க ஆனந்தம் உண்டாகி, துக்கங்கள் தன்னால் குறையும்.

அத்துடன், இந்த மகத்தான மனிதப் பிறவி முடியும் முன்பாக, மனிதன் சகல ஆசைகளையும் விட்டுவிட்டால், மறுபடியும் பிறந்து அவஸ்தைப்பட வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்காது. அவன் அப்படியே, அந்த ஏக இறைவனுடன் இரண்டறக் கரைந்து ஆனந்தமாகி விடலாம்.

மனிதன் மற்ற விலங்குகளைவிட விசேஷ அறிவாகிய ஆறாம் அறிவு படைத்தவன் என்று பெருமைப்படுகிறான். ஆனால், அவன் மட்டும் அவற்றைவிட வித்தியாசமாகவும், விஷேசமாகவும் என்ன செய்துக் கொண்டிருக்கிறான்?...

மிருகங்களைப் போன்றே உண்கிறான், மல, ஜலம் கழிக்கிறான், உடல் உறவு கொள்கிறான், உறங்குகிறான், குழந்தைக் குட்டிகளைப் பெறுகிறான். அதன் பிறகு வயதாகியோ, அல்லது நோய் வந்தோ இறந்துப் போகிறான்.

பொதுவாக, மனிதனும் மற்ற மிருகங்களுக்கு மேலாக, எதுவும் செய்வதாகக் தெரியவில்லை. அப்படியிருக்க, அவனது விசேஷ அறிவினால், அவன் பெருமைப்பட என்ன இருக்கிறது?

முதலில் மனிதன் தன் உடலை ‘‘**நான்**’’ என்று நினைத்துக் கொள்கிறான். அது அவனுடைய மிகப்பெரிய தவறு. மனித உடல் ஒரு ஜடப்பொருள். அந்த உடல் ஐந்து பூதங்களால் ஆனது. பல இந்திரியங்களைக் கருவிகளாகக் கொண்டது. ஆனால், அவற்றையெல்லாம் இயக்குவது, அவனது உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும்.

அந்த உடலிலே, புலன்கள் ஐந்து. பூதங்கள் ஐந்து. ஞானேந்திரியங்கள் ஐந்து. கர்மேந்திரியங்கள் ஐந்து. அத்துடன் அவற்றையெல்லாம் மேய்த்துக் கொண்டிருக்கின்ற உயிர் ஒன்று.

இந்த உயிரானது உடலுக்குப் போக்குவரத்து செய்ய ஒன்பது வாசல்கள் உள்ளன. உயிர் உடலின் மீது ஆட்சி செலுத்தும் தன்மையை **திருமந்திரம்** பின்வருமாறு விளக்குகிறது.

**"புலம் ஐந்து புள் ஐந்து புட்சென்று மேயும்**
**நிலம் ஐந்து நீர் ஐந்து நீர்மையும் ஐந்து**
**குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்**
**உலம்வந்து போம்வழி யொன்பது தானே".** - (திருமந்திரம் - 2025)

மனிதன் ஆறாம் அறிவாகிய பகுத்தறிவின் அடிப்படையில் பல அறிவினைப் பெற அவனது உடல் சார்ந்த உட் கருவிகள், ஐம்புலன்கள் போன்றவற்றைப் பயன்படுத்துகிறான்.

இக்கருவிகள் புறத்திலே உள்ள விசய, சுகங்களினால் இயல்பாகவே ஈர்க்கப்படுகின்றன. அதன்காரணமாக, அவைகள் புறத்தோற்றத்தின் விசய, சுக அனுபவங்களில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு விநாடியும் இந்த விசய, சுக அனுபவங்கள் **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** ஆகிய அகக் கருவிகளைத் தாக்குகின்றன.

ஐம்பொறிகள் வழியாக அனுபவங்களைச் சேகரிக்க, புத்தி அவற்றைப் பாகுபடுத்த, அகங்காரம் அவற்றிற்கு ஒரு எழுச்சியைக் கொடுக்க, சித்தம் அவற்றிற்கு ஒரு விளக்கம் கொடுத்துக் கிடைத்த அனுபவத்தை அறிவாக்க, அந்த அறிவு அவனுக்கு **"நான்" "எனது"** என்கிற உணர்வினைக் கொடுத்து, அவனை ஒருவிதமான மாயையிலே மயக்கத்தில் வைத்திருக்கிறது.

மனிதனது அன்றாட வாழ்வில் அவன் ஏதாவது ஒரு சிறிய சாதனையைப் புரிந்திருந்தாலும் அது அவனது சாதனை என்றும், அதை அவனே செய்ததாக எண்ணி, மகிழ்ச்சியடைந்து, பெருமிதம் கொள்வதும், அவனைப் பிறரிடமிருந்து பிரித்துக் கொண்டு, வேற்றுமைக் காட்டி, அவனுக்கென்று ஒரு தனித்தன்மையை சதா வலியுறுத்தி வருவதும் ஆகிய இந்தக் கருவி, கரணங்கள் அவனது உயிர் இயக்கத்தின் அடிப்படையில்தான் அமைகிறது.

இந்த இயக்கம் மனித உடலில் நடைபெறுகிறது. மனித உடல் ஐம்பூதங்களால் ஆகியது. அங்கே ஞானேந்திரியங்களாகிய ஐந்தும், கர்மேந்திரியங்களாகிய ஐந்தும் உள்ளள. அவைகள் புரியும் செயல்களும், அந்த உடலுக்குப் பல அனுபவங்களைச் சேர்க்கின்றன.

இவ்வாறு ஒரு இயக்கம் நடைபெறுகின்றதென்றால், அதை நடத்த ஒரு சக்தி வேண்டும் அல்லவா?... அந்த சக்தியே, அந்த உடலை இருப்பிடமாகக் கொண்ட உயிராகும்.

இந்திரியங்கள் கருவிகளே, அவைகள் சடப்பொருள்கள். தானாக இயங்கமாட்டா. அதேசமயம், உயிரின் அறிவாற்றலால் அவைகள் இயங்குகின்றன. எனினும், கருவி, கரணங்களோடு உயிரானது இணைந்து செயல்படும்பொழுது, கருவி கரணங்கள் தானாகவே இயங்குவது போன்ற ஒரு பிரமையை மனிதனுக்கு ஏற்படுத்துகிறது.

உண்மையில் உயிர் வேறு. கருவி கரணங்கள் வேறு என்கிற நிலை அறியப்படாதபொழுது, கருவி கரணங்களே தன்னிச்சையாக செயல்படுகின்றன என்கிற மயக்கம் மனிதனிடம் எழுகிறது.

உயிருக்கு கருவி கரணங்கள் தேவை. கருவி கரணங்கள் இல்லாதபொழுது உயிருக்கு வேலை இல்லை. உயிருடன் உடலும், கருவி கரணங்களும் பிறப்பின்போது சேருவதால், உயிருக்கு விளக்கம் பெறக்கூடிய வாய்ப்புக் கிட்டுகிறது. விசய, சுக அனுபவங்களைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் தகுதி கிடைக்கின்றது.

விசய, சுக அனுபவங்களையே உண்மையானவை என்றும், அவற்றைப்பெற வசதி செய்து கொடுக்கும் உடம்பும், கருவிகளுமே உண்மையானவை என்றும் ஒரு வித விபரீத உணர்வு உயிருக்குத் தோன்றத் தொடங்குகின்றது.

அந்த கருவி, கரணங்கள் வழியாக மனிதன் பெறும் அறிவு அவனது உயிரைச் சேர்ந்த அறிவாகும். உயிருக்கு அறியும் தன்மை உண்டு.

உயிரே **அறிவுமயம்** எனவும் கொள்ளலாம்.

ஆனால், உயிரானது எத்தகைய அறிவினைப் பெறுகிறது என்பது உயிரின் பக்குவ நிலையைப் பொறுத்திருக்கிறது.

ஆகவே, மனிதன் பெறும் விசய, சுக அனுபவங்களைப் பற்றிய அறிவு உயிரின் திறனுக்கேற்பவே நிற்கும். இந்த அறிவு மனிதனது கல்வி கேள்விகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

மனிதனின் ஆக்கபூர்வமான உயிர் சக்தி, இந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டு மனிதன் பல துறைகளில் முன்னேற வழிவகை செய்கிறது.

சமுதாய வளர்ச்சிக்கு இந்த அறிவே மையமாகிறது.

விசய, சுக அனுபவங்களின் **அறிவு** விஞ்ஞானம், கலை, பண்பாடு ஆகிய துறைகளில் மனிதன் பல பிரமிக்கத்தக்க சாதனைகளைப் புரிய பயன் பட்டுள்ளது. **அறிவே ஆற்றல்** என்று மேலை நாட்டு அறிஞர்கள் கூறும் அளவுக்கு ஐம்பொறிகள் வாயிலாகக் கிடைக்கக்கூடிய **அனுபவ அறிவு** மனிதனின் சிந்தனையில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

ஆனால், அவர்கள் கூறும் இந்த **அறிவு** ஒரு சிறிய வட்டத்திற்குள்தான் இயங்கும். காரணம், அவைகள் புலன்களினால் பெறப்படுகின்ற **புற அறிவுகள்** ஆகும்.

விசய, சுக அனுபவங்கள் புலன், பொறிகளின் செயல்களுக்கேற்ப உயிரை வந்து சேரும். பொறி, புலன்கள் உடலைச் சார்ந்த கருவிகளாதலால் அவற்றின் செயல்கள் உடலின் நிலையைப் பொறுத்திருக்கும்.

உடலும், அதன் கருவி கரணங்களும் நிலையற்றவை. அழியும் தன்மை பெற்றவை. ஆக, அவற்றின் வழியாகப் பெறக்கூடிய அனுபவமும், அறிவும் நிலைத்து நிற்காது. அவைகள் காலத்தின் போக்கால் கட்டுப்படுத்தப்படும்.

காலம் என்பது நிகழ்வதையும், நிகழ்ந்ததையும், நிகழப்போவதையும் என மூன்று காலங்களையும் வேறுபடுத்தி, நமது சித்தத்திற்கு அளிக்கும் பொழுது, விசய, சுக அறிவும் காலத்தின் கட்டுப்பாட்டால் பாதிக்கப்படும்.

விசய, சுக அறிவு, பொதுவாக, பொருட்களைப் பற்றியதாக இருக்கும். ஏனென்றால், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும் புறத்தேயுள்ள பொருட்களின் மீது இயல்பாகவே கூடுதலாகத் தங்களுடைய நாட்டத்தைச் செலுத்தும். கருவி கரணங்கள் பொருட்களைப் பற்றிய அறிவினைப் பெறுவது நேரிடையாகவும் இருக்கலாம். மறைமுகமாகவும் இருக்கலாம்.

அவைகள், கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் பொருட்களைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். அத்துடன் சூக்குமமாக இருக்கும் பொருட்களைப் பற்றியும் யூகித்தல், அனுமானித்தல் போன்ற வழிகளில் அறிந்து கொள்ளலாம்.

ஒரு மனிதன் ஒரு பொருளைப் பார்க்கிறான். நேரடியாகத் தெரிந்து கொள்கிறான். அப்பொருளிலுள்ள கோடிக்கணக்கான அணுக்களை அவனால் பார்க்க முடிவதில்லை. ஆனால், அதற்காக நிறுவப்பட்ட இந்திரியங்களாகிய கருவிகளை வைத்து அவற்றைப் பார்த்துக் கொள்கிறான். இல்லாவிட்டால், அவற்றினுடைய தன்மையைப் பற்றி மறைமுகமாகத் தெரிந்துக் கொள்கிறான்.

பௌதிகம், இரசாயனம், தொழில்நுட்பக்கல்வி போன்ற பலவிதமான துறைகளில் மனிதன் இன்று பெற்றுள்ள அறிவு நமது பொறிகள், புலன்கள், மனம், புத்தி, சித்தம், அகங்காரங்கள் ஆகிய உட்கருவிகள் இணைந்து செயல்பட்டதன் விளைவே ஆகும்.

பொறி, புலன்களிலிருந்து வெளிப்படும் அறிவு மீண்டும் மீண்டும் அவற்றையே வலுப்படுத்த முயலும். அதனால் கிடைக்கக்கூடிய இன்பங்களை வளர்த்தும், துன்பங்களைத் தவிர்த்தும் வாழ்க்கையைப்புலன் அனுபவப்

பாதையிலே செலுத்துவது உயிருக்கு இயல்பாகி விடுகிறது. இந்த அறிவினால் உயிருக்கு உடல் மீது உள்ள பாசம் வளரும்.

உயிரானது உடலின் பல்வகைக் கருவிகளைத் தனது இயக்கத்திற்குப் பயன்படுத்தி வருகின்றது. இதைத் **திருமந்திரம்** அழகாக எடுத்துக்காட்டுகிறது.

உடம்பாகிய காட்டில் இந்திரியங்களாகிய ஐந்து சிங்கங்கள் வாழ்கின்றன என்று திருமூலர் கூறுகின்றார். அவை சதா புறத்தே சென்று புறப்பொருள்களைப் பற்றிய விஷய ஞானத்தைச் சேகரித்து உடலிடம் வைப்பதாகக் கூறுகின்றார்.

**"அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன**
**அஞ்சும் போய் மேய்ந்தும் அஞ்சுக மேபுகும்".**

உடலைச் சார்ந்த கருவிகளை மதம் பிடித்த யானைகளுக்குத் திருமூலர் பெருமான் ஒப்பிடுகின்றார்.

யானைகளுக்கு மதம் பிடிக்கும்பொழுது, அவைகளை ஊருக்கு வெளியே உள்ள, மக்கள் நடமாட்டம் இல்லாத, கோட்டைப் பகுதியிலே விட்டுவிடுவார்கள்.

அதேபோன்று, மனிதனின் புற இந்திரியங்கள் புறப்பொருள்கள் மீது நாட்டம் கொண்டு செல்ல முயலும்போது, அவற்றை அவனது அறிவால் அடக்கி வைக்க முயற்சிக்கிறான். ஆனால், அவைகள் அவனிடமிருந்து தப்பி ஓடி வெளியே வந்து விடுகின்றன. அவைகள் உடம்பையே அழித்துத் திமிர் கொண்டு அலைகின்றன என்றும் திருமூலர் பெருமான் கூறுகிறார்.

மேற்கூறிய அறிவைத் தவிர வேறு எத்தகைய அறிவும் இல்லை என்று மனிதனின் உள்ளத்திலே ஓர் எண்ணம் எழுவதும், அந்த அறிவின் விளைவே என்பதை அவன் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் வேறு ஒரு அறிவு உள்ளது. நாம் இப்பொழுது பெற்றுள்ள அறிவைச் **சிற்றறிவு** என்றும், பெற்றிராத அறிவைப் **பேரறிவு** என்றும் குறிப்பிடுவது வழக்கம்.

அத்தகைய புறத்திலிருந்து பெற முடியாத பரம்பொருளைப் பற்றிய அறிவு **முழுமையான அறிவு** எனப்படும். நாம் கருவி கரணங்களைப் பயன்படுத்திப் பெறும் அறிவு **பகுதி அறிவாகும்**.

விஞ்ஞான அறிவு மனிதனுக்குக் கொடுக்கும் அறிவு **பகுதி அறிவுதான்**. ஒரு பொருளைப் பற்றி ஒருவன் தொடர்ந்து விசாரித்துக் கொண்டே போனால், அந்த விசாரணையின் வழியாக அவனுக்குப் பற்பல அறிவு கிட்டலாம்.

ஆனால், இத்தகைய அறிவு உடலுடன் இயங்கும் கருவி கரணங்களின் வழியாகப் பெறப்படும் அறிவாகையால் இது இடம், காலம் முதலியவற்றால் கட்டுப்படுத்தப்பட்டது.

நான் என்கிற முனைப்பின் அழுத்தத்தால் வெளிப்படும் அறிவின் திறம் மனிதனிடம் குறைந்த ஆற்றலையே பிரதிபலிக்கும் தன்மையுடையது.

முழு அறிவு என்பது ஒரு மிகப்பெரிய வட்டமாகும். பகுதி அறிவு இந்த வட்டத்தில் எங்கோ ஒரு சிறிய பகுதியை இடம் கொண்டதாகும்.

சிற்றறிவு என்றுமே முழுமையான அறிவாகாது. அதே நேரத்தில் முழு அறிவாகிய பெரிய வட்டம் சிற்றறிவுப் பகுதிகளைத் தன்னுள் அடக்கி நிற்கும்.

முழு அறிவாகிய பெரிய வட்டத்தின் தன்மையை மாற்ற முடியாது. அது நிலையான தன்மை பெற்றது. சிற்றறிவுப் பகுதிகளின் தன்மை மாறிக் கொண்டே இருக்கும். அதையே விஞ்ஞான வளர்ச்சி என்கிறோம்.

விஞ்ஞான அறிவு வளர வளர மனிதன் முன்பு பெற்றிருந்த அறிவை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் புதிய உண்மைகளைச் சேகரித்துக் கொள்கிறான். ஆனாலும் இவ்வாறு மனிதன் பெறும் அறிவு முழுமையமான அறிவாறகாது.

அந்த மனிதனை ஒரு மயக்கத்திலே ஆழ்த்தும். அத்தகைய அறிவின் வளர்ச்சி ஆற்று வெள்ளத்தோடு போகும் பொருட்களைப்போன்று, அவனைக் கட்டுக்கடங்காத நிலைக்கு அழைத்துச் செல்லும்.

இந்த அறிவைப் பெறுவதும், இந்த அறிவினால் இன்பத் துன்பங்களை அநாதி காலம் முதல் தாங்கி அனுபவிப்பதும் உயிராகும்.

உயிர் அறிவுடைய பொருள்தான். ஆனால், அதனுடைய அறிவாற்றல் சிறியது. ஐந்து இந்திரியங்கள், ஐம்புலன்கள் உட்கருவிகள் போன்றவை இல்லாத இடத்தில் உயிரின் அறிவாற்றல் இயங்குவதற்கு வழியே இல்லை.

உயிரினுடைய அறிவாற்றல் வட்டம் மிகவும் சிறியது. ஆனால், பேரறிவாகிய இறைவனின் வட்டம் மனிதனின் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு மிகவும் பெரியது.

இதை உணரும்பொழுது மட்டுமே, மனிதன் எல்லாமே என்னுடைய அறிவு, எனது அறிவின் சாதனையே சாதனை என்றெல்லாம் இறுமாப்படைவது அவனது சிறுமையை எடுத்துக்காட்டுகிறது. மனிதனே எல்லா அறிவுக்கும் சொந்தக்காரர்கள் என்பது ஒரு பெரிய வேடிக்கை அல்லவா என்கிறது திருவருட்பயன்.

**"பொறிஇன்றி ஒன்றும் புணராத புந்திக் (கு)**
**அறி (வு) என்ற பேர்நன் (று) அற".**

பேரறிவினைப் பற்றித் தம்முள் உணர்ந்துக்கொண்ட அருளாளர்கள் இத்துடன் நிற்பதில்லை. முழுமையான அறிவே உண்மையான அறிவென்றும் மற்றதெல்லாம் **அறியாமை** என்றும் கூறுகிறார்கள்.

ஏனெனில், உடலின் கருவி கரணங்களைப் பற்றி மனிதன் பெறும் அறிவு உடலையே சார்ந்திருக்கும். ஆகையால் உடலைப் பற்றிய அறிவு பரம்பொருளைப் பற்றிய அறியாமை நிலைக்கு மனிதனைத் தள்ளி விடுகிறது.

அதாவது, தனக்கு வேண்டிய ஒன்றைப் பார்க்கும்பொழுது மற்றதைப் பார்க்க, உள்ளத்திலே ஆவல் எழும்பாது. அந்த அறிவு பாசத்தோடு சம்பந்தப்பட்ட அறிவாகும். அதாவது, உயிரைச் சார்ந்த **ஆணவம், கன்மம், மாயை** போன்ற மலங்கள் அந்த அறிவுக்கு ஒரு உருவத்தைக் கொடுக்கின்றன.

மனித மனம் அந்த உருவத்திலே ஈடுபட்டு விடுகின்றது. உருவம் எத்தகைய மூலப்பொருளினால் செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிந்துகொள்ள அங்கு ஆவல் எழுவதில்லை.

ஆகவே, உருவத்தைப் பற்றிய அறிவு ஒரு அறியாமையாகும்.

யானைப் பொம்மையைப் பார்க்கும் ஒரு குழந்தைக்கு அது மரத்தால் செய்யப்பட்டுள்ளது என்கிற உணர்வு தோன்றுவதில்லை. அவ்வாறே, பல தங்க ஆபரணங்களைப் பார்த்து அதிசயப்பட்டு நிற்கும் பெண்மணிக்கு அவற்றின் மூலப்பொருள் தங்கமே என்கிற உண்மை தோன்றுவதில்லை. அந்த அளவுக்கு அவள் அந்த ஆபரணங்களின் அழகில், வேலைப்பாட்டில் தனது மனத்தைப் பறிகொடுத்து விடுகிறாள்.

உண்மை அறிவின் முன் நாம் பெற்றுள்ள அறிவெல்லாம் அறியாமைதான் என்கிறார் திருமூலர்.

இந்த **அறிவு, அறியாமை** ஆகிய நிலைகளுக்கு அப்பால் ஒரு நிலை உள்ளது. அதுவே ஒரு **பேரறிவு நிலை**. அதுவே, பேரனுபவ நிலையுமாகும்.

அந்தப் பேரறிவு நிலை சூரியனின் ஒளிப்போல மற்ற எல்லா அறிவு நிலைகளையும், இருளிலிருந்து மீட்டு பிரகாசப்படுத்துகிறது. அந்த அறிவு நிலைக்குச் சமமாக வேறொன்றுமில்லை. அது பேரானந்தத்தைக் கொடுக்கும்.

திருமூலர் கூறுவதுப்போன்று, அது ஓர் அழகிய நிலையாகும். தன்னிலை விளங்கும். பிற உயிர்களுடைய நிலையும் தெளிவாகும். நமது உயிரின் இயக்கத்திற்கான சுத்தமான விளக்கம் கிடைக்கும்.

**"அறிவு அறிவுஎன்று அங்கு அரற்றும் உலகம்**
**அறிவு அறியாமை யாரும் அறியார்**
**அறிவு அறியாமை கடந்தறி வானால்**
**அறிவு அறியாமை யழகிய வாறே".** - (திருமந்திரம் - 2362)

இன்றைய உலகில் கல்விக்கு ஒரு பெரிய இடத்தை மனிதன் கொடுத்திருக்கிறான். கல்விக் கூடங்களில் விஞ்ஞானத்தைப் பற்றிய கல்வி முதலிடம் பெறுகிறது. விஞ்ஞானத்தை மேலும் மேலும் கற்று, விஞ்ஞான கல்வியை வாழ்க்கை இன்பத்திற்காகப் பயன்படுத்தி, வசதிகளைப் பெருக்கிக் கொள்வதே மனிதனின் ஒரு சிறந்த குறிக்கோளாக வைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கல்வியால் ஒழுக்கமோ, அடக்கமோ, நேர்மையோ, சீலமோ கற்பவர்களுக்குக் கிடைக்குமா? என்று இன்றைய மனித சமுதாயம் பெரிதும் கவலைப்படுவதில்லை.

அதற்கும் மேலாக, மனிதர்களின் உள்ளங்களிலே பரம்பொருளைப் பற்றிய விளக்கம் கிடைக்குமா? என்றும், மனிதன் கற்கும் கல்வியின் பயனாக அது அமைய வேண்டும் என்றும் இன்றைய மனிதர்கள் எண்ணிப்பார்பதில்லை.

ஆனால், அன்றைய முன்னோர்கள் கல்வியின் பயன் **இறை உணர்வு** என்றும், அந்த உணர்வின் விளைவு **ஒழுக்கம்** என்றும், அந்த ஒழுக்கத்தைப் பெற்றவர்கள் **நற்கல்வி கற்றவர்கள்** என்றும் அறிவுறுத்தினர்.

**"கரிப்பு (உவர்ப்பு) அறியா மிகும் கல்வி கற்றேனே"** என்றார் திருமூலர்.

**"துணையது வாய்வருந் தூயநற் கல்வியே"** என்பதும் அவரது திருவாக்காகும்.

அத்தகைய கல்வியைப் பெறுவதே, இன்றைய மனிதனின் குறிக்கோளாக அமைய வேண்டும். அத்தகைய அறிவினைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் சிற்றறிவினைப் பெருக்கிக்கொண்டு போவதில் எந்தப் பயனுமில்லை என்கிறார் திருமூலர்.

மாறாக மனிதனுடைய முயற்சிகள் இறை அறிவைப் பெறுவதில் ஈடுபட வேண்டும். மனிதனுடைய முயற்சிகளின் பலனாக, ஈஸ்வரனின் திருவருளால் பரம்பொருளைப் பற்றிய ஞானத்தை அவன் பெற்றானாகில், எல்லாவற்றையும் அறிந்த ஒரு நிலையை அவன் பெற்றுவிடலாமே என்கிறார் திருமூலர்.

இந்த அறிவே பரஞானமாகும். இது திருவருள் சக்தியினால் நிகழ்கின்றது. இந்த அறிவினை மனிதன் உள்ளுணர்வாகப் பெறுகின்றான். இந்த அறிவு அவனுக்கு அனுபவத்தால் கிடைக்கிறது.

**"எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறையென லாமே".** - (திருமந்திரம் - 2596)

அருளாளர்கள், இறையுணர்வாளர்கள் இந்த அனுபவத்தைப் பெற்றிருந்தனர். புறக்கண்களால் காண முடியாத ஒன்றை அகக்கண்களால் கண்டு பேரின்பம் பெற்றார்கள்.

புறக்கருவிகளால் இந்த அனுபவத்தைப் பெறுவது இயலாது. சிற்றறிவு வட்டத்திற்கு அப்பால் நிற்கும் ஒன்றைச் சிற்றறிவினால் பிடித்துவிட முடியாது.

**"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"** என்பது திருமந்திரம் (2944).

பரம்பொருளைப் பற்றிய ஞானக்கல்வி அருளாளர்களுக்கு உள் அனுபவமாகக் கிடைக்கின்றது. இது திருவருளால் கிடைத்த காரணத்தால் அருள் அனுபவமாகவும் உள்ளத்துள்ளே நின்று ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது.

திருவருளால் அந்த அனுபவத்திற்கான தகுதியும், பக்குவமும் பெற்றவர்கள் அந்த பரம்பொருள் அனுபவத்தைப் பெறுகின்றனர்.

"திருவருளால் விளக்கம் பெற்ற அகக்கண்ணைத் திறந்து பார்த்தேன் - அவ்வாறு திறந்து பார்க்கும்பொழுது, ஒப்பற்ற தலைவன் சிவமாகிய **பரம்பொருள்** என் உள்ளத்தில் சோதிமயமாக நிறைந்திருந்து என்னை **அறிவுமயமானவன்**

என்று உணர்த்தி அருளினான்" எனத் திருமூலர் தனது அனுபவத்தைச் சொல்லுகிறார்.

அருள் அனுபவம் வாக்கிற்கும், ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. பரம்பொருளை அழியக்கூடிய அற்ப புறப்புலன்களால் அளக்க முடியாது.

அருள் அனுபவம் பெற்ற பெரியோர்கள் அன்பு மேலிட்டு, பேச்சற்ற நிலைக்கு வந்து விடுகின்றனர். அந்த நிலையையே அவர்கள் பேரின்ப நிலையாகக் கருதுகிறார்கள். **"பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே"** என்பார் திருமூலர்.

அருள் அனுபவத்தை வெறும் சொற்களாலும், மொழிகளாலும் மட்டும் விளக்கிவிட முடியாது.

இறைவனைத் தம்முள் உணர்ந்தபின்னர் பேரின்ப வெள்ளத்தில் திளைத்து நிற்கும் இறை உணர்வாளர்கள் தங்களுடைய அனுபவத்தைச் சம்பிரதாய முறையில், மொழியைப் பயன்படுத்தி மக்களுக்குத் தெளிவாக்க முற்பட்டாலும், அவர்களுடைய உள்ளக்கிடக்கை, பண்பட்ட உணர்வினை, **வெறும் மொழிகள்** முழுமையாகப் பிரதிபலிக்காது என்பது அறிவாளர்கள் நமக்குக் கூறும் உண்மையாகும்.

எனினும் மக்களுக்குத் தங்களது உணர்வைப் பகிர்ந்துக் கொடுக்க வேண்டிய காரணத்தினால் அவர்கள் மொழியினைக் கையாளுகிறார்கள்.

உண்மையில் **"சும்மா இருக்கும் சுகம்"** மொழிக்கு அப்பாற்பட்டது.

இந்த நிலையில் அருள் அனுபவத்தைச் **சாஸ்திரங்களிடமிருந்தும், நூல்களிடமிருந்தும்** பெற்றுக் கொள்ள முடியாது.

சாஸ்திர நூல்கள் ஒரு வழியை, பாதையைக் காண்பித்துக் கொடுக்கலாம். ஆனால், சென்று அடைய வேண்டிய இடம் **சாதகனுடைய சாதனையைப்** பொறுத்திருக்கின்றது.

நூல் அறிவு பெற்று மட்டும் இறைவனை அடைய முடியாது என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும்.

எல்லாவற்றிலும் பெரிய ஞானம் என்பது, நிலைத்த ஆனந்தத்துக்கு வழி கண்டு கொள்வதுதான்.

மனிதன் இப்படிப்பட்ட நிலைத்த ஆனந்தத்தைப் பெறுகிறானா?

ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால், பரம தாத்பரியமாகத் தெரிவது, இந்த ஞானம், ஆனந்தம் என்பதெல்லாம் ஒன்று தான்.

மனிதன் உண்மையில் தன்னை யார்? என்பதை உணரும் **ஞானம்** வரும்போது, அவனே அந்த **ஞான மயமான ஆனந்தம்** என்று கண்டு கொள்வான்.

வெளி வஸ்துக்களிலிருந்து அவனுக்கு ஆனந்தம் வரவில்லை. அவனிடமிருந்தேதான் அந்த **ஆனந்தம்** பிறக்கிறது. அவனது உண்மை ஸ்வரூபமான ஆனந்தத்தை அவனது அஞ்ஞானத்தினால் மூடி மறைத்துக் கொண்டிருக்கிறான்.

அத்தகைய அஞ்ஞானம் (அறியாமை) என்பது, மனிதன் தன்னுடையது என்று ஒன்றிடம் சம்பந்தம் வைக்கும்போதுதான், அதிலிருந்து ஆனந்தத்தை அனுபவிப்பதாகக் கருதுகிறான். அந்த சம்பந்தம் போய் விட்டால், ஆனந்தம் அவனுக்கு போய் விடுகிறது.

உதாரணமாக, ஒருவனுக்குச் சொந்தமாக கொஞ்சம் விவசாய பூமி இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த வயல் அவனுடையது என்பதால், விளைச்சல் அதிகமாகும் போதெல்லாம் அவனுக்கு மனம் குளிருகிறது. ஆனந்தம் உண்டாகிறது.

அதுவே, விளைச்சல் குறையத் தொடங்கும்போது, அவனுக்கு ஆனந்தம் குறைகிறது. அதன் காரணமாக, அந்த விவசாய விளை நிலமான வயலை வேறு ஒருவனுக்கு விற்று விடுகிறான்.

மறுபடி, அடுத்த வருஷம் அதே வயலில் ஏகமாக விளைச்சல் கூடியிருக்கிறது. இப்போது அதைப் பார்க்கும்போது அவன் மனம் குளிரவா செய்கிறது?

அடடா, போன வருஷம் நம் கையில் இருந்தபோது தரிசு மாதிரிப் பொட்டலாக இருந்த பூமி, இப்போது எவனோ ஒருவனுக்கு அதிஷ்டம் அடிக்கிறதே என்று வயிற்றெரிச்சல்தான் உண்டாகிறது.

‘**எனது**’ என்ற சம்பந்தம் இருந்தவரைக்கும் அவனுக்கு அந்த பூமியின் அமோக விளைச்சலில் **ஆனந்தம்** இருந்தது. பிறகு அதே பூமி மற்றொருவனுக்கு கைமாறியதும், அந்த விளைச்சலில் உண்டான உணர்ச்சி அடியோடு மாறி விட்டது.

மாயைக்கு ஆளான **நான், எனது** என்பதன் சம்பந்தத்துக்கே இத்தனை **ஆனந்தம்** இருக்கிறது என்றால், எதிலும் சம்பந்தப்படாமல் பூரண ஞானமாக இருக்கிற அந்த வெறும் "**நான்**" எத்தனை ஆனந்த மயமாக இருக்கும்!...

சிறிய பொத்தல்கள் கொண்ட ஒரு சட்டியால் ஒரு தீபத்தை மூடிவைத்தால் துவாரங்கள் வழியாக மெல்லிய ஒளிக் கிரணங்கள் வெளிவரும். மாயையால் மூடப்பட்ட ஆத்ம தீபத்திலும் இந்திரிய துவாரங்கள் வழியாகக் கொஞ்சம் கொஞ்சம் ஆனந்த ஒளியைப் பார்க்கிறோம்.

மாயச்சட்டியை உடைத்து விட்டால், ஆனந்த ஜோதிர் மயமாகவே ஆகிவிடலாம்.

மாயையை எப்படி உடைப்பது? என்றால் ஆசைகளை அடக்குவது தான் ஒரே வழி.

மனம் இருக்கும் வரை ஆசைகளும் இருக்குமே!...

அதனால் மனத்தை அடக்கிவிட வேண்டும். மனம் அடங்கி விட்டால் மரண நிலையில் இருப்பதுப் போன்று, ஒரு சக்தியுமின்றி ஜடம் போன்று ஆகிவிடுவோம் என்று எண்ணி விடக்கூடாது.

மாறாக, மனமற்ற நிலை என்பது இந்திரியங்களின் விசய, சுகங்களின் மீது, அதிக அக்கரைக் கொள்ளாமல், இருப்பது ஒன்றே சகல சக்திகளுக்கும் ஆதாரமான நிலை எனலாம்.

சாதாரணமாக, பல வாய்க்கால்களின் வழியாக பாயும் நீரை அடைத்து ஒரே வாய்க்கால் வழியாகத் திருப்பினால், அந்த வாய்க்காலில் மட்டும் அதிகம் நீர் பெருகுவது போன்று, அல்லது, உடலில் ஒரு உறுப்பில் ஊனம் உள்ளவர்களுக்கு இன்னோர் உறுப்பில் அதிக ஆற்றல் இருப்பதைப் போன்று, ஆத்ம சக்தியைப் பலவாறாகச் சிதறச் செய்யும் எல்லா இந்திரியங்களையும் அடைத்துக் கொண்டு விட்டால், அப்போது **சகல சக்திகளும்** ஒரே இடத்தில் அமைதியாக, ஆனந்தமாகக் கூடி நிற்கும்.

அந்த ஆத்ம சக்தியைக் கொண்டு **அனேக நன்மைகளை** இந்த உலகுக்கு செய்யலாம்.

ஆத்ம ஞானம் பெற்ற ரிஷிகளின் அபரிமிதமன சக்தியே இதற்கு திருஷ்டாந்தம். சகல லோகங்களுக்கும், சகல காலங்களுக்கும் சென்று அவர்கள் விசயங்களைப் பெற்றுக்கொள்ளும் பெரும் ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

சாதாரண மனிதனின் காதுகளுக்குக் கேட்காத சப்தங்களை, அவர்கள் ஆகாயத்தில் கேட்டு வேத மந்திரங்களைக் கொடுத்தார்கள்.

எப்படி ஆசையை அடக்குவது?...

எப்படி மனத்தை நிறுத்துவது?...

எப்படி நிலைத்த ஆனந்தத்தை அடைவது? என்று கேட்கிறவர்கள் அந்த வேதங்கள் கூறியபடி நடந்தாலே போதும், அவர்கள் வாழ்வில் **ஆனந்தம்** அடி எடுத்து வைக்கும்.

உண்மையில் மனிதனுக்கு குறையே இல்லை. வெளியிலே இருக்கிற அத்தனை ஆனந்தமும் அவனுக்குள்ளேயே அடக்கம். வெளியே இருந்து எது வந்தாலும் வரட்டும். அதனால் பாதகமில்லை. எதும் வராததால் மட்டும் அவனுக்கு என்ன குறை இருக்க முடியும்?

அவனுக்குள்ளேயே இருக்கிற பரமாத்ம வஸ்துவின் **அறிவுப் பிரகாசம்தான் வெளியில் இருப்பதெல்லாம்** என்கிற தெளிவோடு எப்போதும் அவனால் இருக்க இயலும்.

துக்கம் என்பது மனிதனின் உடன் பிறப்பு. அவனது பூர்வ கர்மாவின் பயனாக, அந்தத் துக்கங்களுக்கு அவன் முன்னதாகவே விதை போட்டிருக்கிறான். அதிலிருந்து தப்ப வழியே இல்லை.

காரணம், "**வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினை விதைத்தவன் தினை அறுப்பான்.**" ஆனால், கர்மத்தினால் ஏற்படும் கஷ்டத்தைப் பொறுத்துக் கொண்டு சாந்தமாக இருக்க வழிவகை உண்டு.

புதிதாக கர்ம மூட்டையைப் பெருக்கிக் கொண்டு, எதிர் காலத்தில் கஷ்டத்தை அதிகமாக்கிக் கொள்ளமல் இருக்கவும் வழிவகை உண்டு.

அதற்கு ஆத்ம ஞானம் ஒன்றுதான் சிறந்த வழி.

சித்தப்பிரமை பிடித்து, ஜடமாகி விட்டால் கஷ்டம் தெரிவதில்லை. பைத்தியத்தின் கஷ்டம் வேரூன்றி நிற்பதில்லை. அதே சமயம், அந்த சித்தப் பிரம்மையில் மூலம் நித்திய ஆனந்தமும் இல்லை.

அவ்வாறே, தூக்கத்தில் துக்கமில்லை.

ஆனால், தூக்கத்தில் சுகமாக இருக்கிறோம் என்கிற **அறிவு** இல்லை.

ஆத்மஞானத்தை அடைந்த ஞானி ஒருவன்தான் எப்போதும் விழிப்பிலேயே இருந்துக்கொண்டு, எல்லையில்லாத ஆனந்தத்தில் எப்பொழுதும் திளைக்கிறான். அவனது தேகத்தில் **சிரமங்கள்** இருக்காது என்பதில்லை. ஆனால், அவனுடைய மனத்தில் **கிலேசங்கள்** இருக்காது. வெளியில் இருக்கிற சிரமம், அவன் உள்ளே பாதிப்பது இல்லை.

கிணற்றுக்கு உள்ளே நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும் போது, கனம் தெரிவதில்லை. ஆனால் தண்ணீர் மட்டத்துக்கு மேலே குடம் வந்தவுடன் கனக்க ஆரம்பித்து விடுகிறது.

அவ்வாறே, எளிதில் புரட்ட முடியாத பெரிய மரங்களை எல்லாம் நீரின் வெள்ளப்போக்கில் புரட்டி எடுத்துக் கொண்டுப் போவதுப்போன்று, மனிதனின் துக்கங்களையெல்லாம் **ஆத்மஞானம்** என்கின்ற தண்ணீரில் போட்டு அழுத்தி விடவேண்டும். அப்போதும், துக்கத்திற்கு காரணமான விசய, சுகங்கள் இருக்கத்தான் செய்யும்.

ஆனால், நீருக்குள் இழுக்கப்படுகின்ற தண்ணீர் குடம் போன்று, அந்த துக்கங்கள் எல்லாம் **ஆத்மஞானம்** என்ற நீருக்குள் **பரம இலேசாகி** விடும். இந்த ஞானத்தின் வாயிலாக, தன்னை உணர்வதே உண்மையில் ஆனந்தம்.

அந்த ஆனந்தத்தை **அகத்தில் அறிவதே அறிவு!.**


**நன்றி!**

**ஓம் தத் ஸத்!**

e-mail:- prajnan@paraparam.in

Website:- paraparam.in

# அகத்தில் அறிவதே அறிவு!



பராபரம் பாடசாலை